Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 314 05.03.2001 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

உங்களுக்கு தேவையான
உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்
உமையாள்
ஜீவல் ஹவுஸ்
மார்க்கட் றோட், பட்டிருப்பு -
களுவாஞ்சிக்குடி,
Advt.

# சந்திரிகா, கதிர்காமர், ரணிலுடன் சமாதானத் தூதுவர் எரிக் ஆலோசனை!

(எமது அரசியல் நிருபர்)

**இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான சுமுகமான தீர்வு காண்பதற்காக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு அனுசரணையாளராக செயல்படும் நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாய்க்க குமாரதுங்காவையும் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காம ரையும் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.**

பிரதிநிதி அமைச்சர் பேரா .சிரியர் ஜி.எல்.பீரிஸ்சும் இப் பேச்சுவார் த்தையில் கலந்து கொண் டதாகவும் கூறப்படுகிற து.எதிர் கட்சித் தலை வர் ரணில் விக்கிரம சிங்காவையும் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசி னார்.

அரசும் விடுதலைப் புலிக ளும் விரையில் நேரடிப் பேச்சு நடத்துவது சம்பந்தமாக இந்த ஆலோசனைகளின் போது ஆராய ப்பட்டதாக அரசியல் வட்டாரங்க ளில் பேசிக் கொள்ளப் படுகிறது.

இதே சமயம் ஜனாதிபதி சந்திரிக்கா தமது .அரசியல் சீர் திருத்த யோசனைகளின் அடிப் படையிலேயே பேச்சுவார்த் தையைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருவதாகவும் அரசியல் அமைப்பில் சீர்த்திருத்தம் செய்ய வேண்டும் யோசனை தெரிவிக்கா விட்டால் அது பற்றி பேச்சுவார்த் தையின் போது பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்து விட்டதாக வும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவி க்கின்றன.

இந்த மாத இறுதிக்குள் அல்லது அடுத்த மாதத்துக்குள்


(8ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவர் இன்று யாழ்ப்பாணம் செல்கிறார்

(நமது நிருபர்)


கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அஷ்லிவில்ஸ் இன்று யாழ்ப்பாணம் செல்கிறார். இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருக்கும் தூதுவர் உள்ளூர் பிரமுகர்களையும் பொது அமைப்புகளைச் சேர்ந்தவர் களையும் சந்திக்கவிருப்பதுடன் யாழ்ப்பாண நூல் நிலையத்தில் இலங்கையின் மோதல்கள்

(8ம் பக்கம் பார்க்க)




வாசகர்களுக்கு தினக்கதிர் தனது ஈகைப்பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது

ஹஜ்பெருநாள் வாழ்த்துக்கள்
அஷீகா டூவர்ஸ் & டிரவல்ஸ்
காத்தான்குடி - 6, பிரதான வீதி.
(மீரா பாலிகா வித்தியாலயத்திதுக்கு முன்பாக)
எமது ஸ்தாபனத்தில்
♦ விமான டிக்கட்டுக்கள்
♦ விமான ஆசனங்கள் உறுதிப்படுத்துதல்
♦ அரசாங்க காப்புறுதி கட்டணம்
முதலியன செய்து தரப்படும்



வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்
♦ சவூதி அரேபியா
♦ குவைத்
♦ டுபாய்
♦ டோஹா கட்டார்
♦ ஜோர்டான்
♦ மலேசியா
♦ சிங்கப்பூர்



மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ஆண்.பெண் இருபாலாருக்கும் உடனடி வேலை வாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.
(பாஸ்போர்ட்டுடன் நேரில் வரவும்)
குறிப்பு:-
வீட்டுப்பணிப் பெண்கள், வீட்டுச் சாரதிகள் ஆகியோருக்கு விஷேட சலுகைகள் உண்டு
♦ வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத் தொடர்புகள், பெக்ஸ், போட்டோ கொப்பி அனைத்துக்கும் இன்றே நாடுங்கள்.
அஷீகா டூவர்ஸ் & டிரவல்ஸ்
இல 12, ஜாமியுழ்ழாபிரீன் சொப்பிங் கொம்ப்ளக்ஸ்
பிரதான வீதி, காத்தன்குடி-06
தொலைபேசி இல. 065-47140,பெக்ஸ் 065-47141

## யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இரவு 8 மணியிலிருந்து அமுலுக்குவரும் ஊரடங்கு உத்தரவு இப்பொழுது மிகக் கடுமையாக கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

## தனியார் வங்கியில் இருந்து இருபது இலட்சம் ரூபா கொள்ளை

(நமது நிருபர்).

கடவத்தை அக்பர் டவுன் பகுதியிலிருந்த வங்கி ஒன்றிலி ருந்து இருபது லட்சம் ரூபா பணம் கொள்ளையர்களால் கொள் ளையிடப்பட்டுள்ளது.

வான் ஒன்றில் வந்த ஆயுத குழுவொன்று துப்பாக்கி முனையில் வங்கி உயர் அதிகாரி களையும் ஏனைய ஊழியர்க ளையும் மிரட்டிவிட்டு பணத்தை அபகரித்துச் சென்றதாகத் தெரிவிக்கிறது.

இச்சம்பவத்தை தொடர்ந் து 'பொலிஸார் விசார ணை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சம்பவத்தில் கொள் ளையர்கள் ரி.56ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி மிரட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மக்கர் நகரில் 35 யாத்திரிகர்கள் பலி !

(நமது நிருபர்)

புனித மக்கா நகரில் ஹஜ் கடமைக்காக சென்ற யாத்தீரிகர்கள் 35 பேர் சன நெருக்கடியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 23 பேர் பெண்கள் 13 பேர் ஆண்கள் இவர்கள் எந்த நாட்டை சேர்ந்த வர்கள் என்பது பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை.

சாத்தான் மீது கல் எறிகின்ற சடங்கின் போதே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது .

கடந்த 88ம் ஆண்டு சன நெருசலில் சிக்குண்டு சுமார் நூறு பேருக்கு அதிகமானவர்கள் உயிரி ழந்த பின்பு நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

### எரிகணை இதாம்பரம்

யுத்தத்தை முன்னெடுத்துக் கொண்டே புலிகளுடன் பேசி சமாதானத்திற்கு முயற்சிப் போம்.




உதட்டில சமாதானம் உள்ள த்தில யுத்தம் அதுதான் ரெண்டு தோணில கால வைக்காவு

வெளிநாட்டு
வேலை வாய்ப்பு
இலவசம்
சவூதி அரேபியா செல்லும்
25~38 வயதுக்கிடைப்பட்ட
பெண்களுக்கு முற்றிலும்
இலவசமான பயண
ஏற்பாடுகள்
ஆண்களுக்கு:-
♦ அலுமினியம் பப்ரிகேற்றர்ஸ்
♦ அலுமினியம் இன்ஸ்ரோலர்
♦ அலுமினியம் பிற்றர்
வேலைவாய்ப்புக்கள்
நியூ பாஹிம் என்டர் பிரைஸஸ்
283/1, மெயின் வீதி,
புறக்கோட்டை.
15/1, 15/2 பிரதான வீதி
காத்தான்குடி-02
தொ.பே:065-47090,01-906176
ADVT LL No 736

கிழக்கிலங்கையில் அபான்ஸ் நிறுவனத்தினரின் ஒரேயொரு அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்கள்



அரேபியன் ஹோம்
இல :11, பிரதான வீதி, காத்தான்குடி –06.
தொ.பே. : இல: 065-46478
(மீரா பாளிகா பாடசாலைக்கு முன்பாக)
Advt.
அபான்ஸ் தயாரிப்புகள் அனைத்தும் மலிவு விலையில் உத்தரவாதத்துடன் எம்மிடம் பெறலாம்.
மாதாந்தக் கொடுப்பனவு வசதிகளும் உண்டு
ADVT

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055

E-mail :- tkathir@snet.lk


## இந்தியத் தூதுவரின் விஜயம்

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி யாழ்ப்பாணத்திற்குச் சென்று இரு நாள்தங்கி மக்கள் சிலரையும் மக்கள் பிரதிநிதிகள் சிலரையும் சந்தித்துப்பேசி சில இடங்களையும் பார்வையிட்டு கொழும்புக்குத் திரும்பியிருக்கிறார்.

இந்தியத் தேசபிதா காந்தி முதல் இந்தியக் குடியரசின் தலைவராகப் பதவிவகித்த தத்துவஞானியும் மேதையுமான சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் வரை அறிஞர்களும், மகான்களும், கலைஞர்களும் கூட அடிக்கடி வருகைதந்து தரிசித்து மகிழ்ந்து திரும்பிய பூமி யாழ்ப்பாணம்.

இந்திய விடுதலைப் போராட்டத்தினால் ஆகர்ஷிக்கப்பட்ட யாழ்ப்பாண வாலிபர்கள் இலங்கையும் அந்நிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற வேண்டுமென்று முதன்முதலில் 'வாலிபர் காங்கிரஸ்' என்ற அமைப்பை உருவாக்கியதும் யாழ்ப்பாணத்தில்தான்.

இந்தியதேசிய காங்கிரஸ் தலைவர்களை இலங்கைக்கு வரவழைத்து இந்தியவிடுதலைப் போராட்டத்திற்கு உதவியும் ஆதரவும் வழங்கியதும் இந்த யாழ்ப்பாணந்தான்.

இந்தியாவைத் தாய்நாடு என்றும் இலங்கையைச் சேய் நாடு என்றும் அழைத்தவர்களும் இநதியாவிற்கும், இலங்கைக்குமிடையில் உறவுப்பாலம் அமைத்தவர்கள் ஆறுமுக நாவலரிலிருந்து சுவாமி விபுலானந்தர் வரையும் இலங்கைத் தமிழர்கள்தான்.

இலங்கை சுதந்திரமடைந்த பின் தமிழ் மக்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டதுடன் அவர்களது சொந்த மண்ணும் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்பட்டு வருவதையும் கண்டு ஏக்கமடைந்த தமிழ்த் தலைவர்கள் இலங்கை பெற்ற சுதந்திரத்தை சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் அனுபவிப்பதற்கும் இரு சமூகத்தவரும் தங்களுக்குரிய உரிமையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கும் இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சி அமைப்பை உருவாக்கி வாழ முடியுமென்று கோரிக்கை வைத்தனர்.

இந்த இலட்சியத்தை அடைவதற்கு காந்தி காட்டிய வழியில் அகிம்சைப் போராட்டத்தைக் கடைப்பிடித்து தமிழ் மக்களுக்கு தமிழ்த் தலைவர்கள் வழ்காட்டினர்.

ஆனால் இலங்கையில் காந்தீயத்திற்கு மதிப்பில்லை என்பதை ஆட்சி பீடத்திற்கு வந்த சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளும், தலைவர்களும், பேரினவாதிகளும் குண்டர்களைத் தூண்டிவிட்டும், அரச படைகளைக் கொண்டும், ஆயுத பலத்தினால் காந்தீய வழிப் போராட்டங்களை அடக்கி ஒடுக்கியதுடன் தமிழினத்தையே அழித்து ஒழிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டனர்.

இதன் பின்னர்தான் தமிழ் மக்களையும், தமது மண்ணையும், தம்மையும் அர்ராஜகத்தில் இருந்தும், அட்டூழியத்திலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்.

தமிழ் மக்களின் இந்த தற்காப்புப் போராட்டத்திற்கு ''பயங்கரவாதம்'' என்று ஆட்சியாளர்களும் பேரினவாதிகளும் முத்திரை குத்தி தமிழ் இனத்தை அழிப்பதற்கு இந்தியா உட்பட உலக நாடுகளையும் துணைக்கு வசப்படுத்தியிருக்கின்றனர்.

பயங்கரவாதத்தினால் ஏற்பட்ட அழிவுகள் என்று வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட அழிவுகளை அரசு எடுத்துக் காட்டுகிறது.

தமது சொந்த மண்ணிலே சொந்த இல்லங்களையும் இழந்து அநாதைகளாக, அகதிகளாகத் தமிழ் மக்கள் திரியம் அவலங்களில் ஒரு சிறு பகுதியையாவது இந்தியத் தூதுவர் பார்க்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருப்பாரென்று நினைக்கின்றோம்.

தூதுவர் சந்தித்த மக்கள் தமது அவலங்களையும் இந்த நிலைக்குரிய காரணங்களையும் தூதுவரிடம் எடுத்துச் சொல்லியிருப்பார்கள்.

1970களில் சர்வதேச பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வந்த இன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பாயி யாழ்ப்பாணத்திற்கும் சில மணித்துளிகளுக்கு விஜயம் செய்த போது மக்கள் பிரதிநிதிகளைக் கூடச் சந்தித்து அளவளாவுவதற்கு அன்றைய சிறிமா அம்மையாரின் ஆட்சி அனுமதிக்கவில்லை.

அன்று எதிர்க் கட்சியைச் சேர்ந்தவராயிருந்த வாஜ்பாயி மீண்டும் தனிப்பட்ட முறையில் வருவதாகக் கூறிச் சென்றவர் பின்னர் வரவேயில்லை.

இன்று பிரதமராக இருந்த போதிலும் கதிர்காமரின் வார்த்தைகளில் கட்டுண்டிருக்கிறார். உண்மையை அறிந்து கொள்ளவோ ஆராயவோ அவர் துணியவில்லை.

காந்திஜியின் பரம்பரையில் வந்த தூதுவர் கோபால்கிருஷ்ண காந்தி சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவராச் சிறிதாவது இருப்பாரென்று எதிர்பார்க்கலாம். இலங்கையில் தமிழ் மக்கள் பயங்கரவாதத்தை வளர்க்கவில்லை, பயங்கரவாதிகளுமல்லர் என்பதையும் தமிழ் மக்கள் அடக்கு முறையை எதிர்த்து விடுதலைக்காகவே போராடுகின்றார்களென்பதையும் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி இந்திய அரசு புரிந்து தெளிந்து கொள்ளக்கூடிய முறையில் எடுத்துச் சொல்வார் என்று எதிர் பார்ப்போம்.

இனியாவது இலங்கையில் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கவும் அவர்கள் சுயநிர்ணய உரிமையுடன், பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கு இந்திய அரசு உதவ முடியுமென்பதையும் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி இந்திய அரசுக்கு உளவுத்துறையையும் தாண்டி எடுத்துக் கூறுவாரென்று நம்புவோம்.

# ஈழத்துத் தமிழ் நாவல் முன்னோடிகளில் பிரதானமானவர் வ.அ.இராசரெத்தினம்

## – கலாநிதி செ.யோகராசா –

(மைக்கல்)

ஈழத்து இலக்கியப் பரப்பில் நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர்கள் ஒரு சிலரே. அந்த வகையில் ஈழத்துத் தமிழ் நாவல் முன்னோடிகளில் பிரதான இடம் வ.அ.இ.விற்கு, உண்டு என நேற்று (ஞாயிறு) காலை மட்/வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் மட்/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் ஒளி அமரர் வ.அ.இராசரெத்தினம் மறைவையொட்டிய நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு வ.அ.இ.வின் நாவல் தடங்கள் எனும் தலைப்பில் உரையாற்றிய கலாநிதி செ.யோகராசா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "வாசிக்க வேண்டும்" என்பதே வ.அ.வின் தாரக மந்திரம் தன்னை ஒரு எழுத்தாளன் என்று சொல்லிக்கொள்வதைக் தவிர 'தீவிர வாசகன்' என்று சொல்லிக் கொள்வதிலேயே அவர் பெருமைப்பட்டார். அதற்கேற்ப அவர் தனது வாழ்நாளில் நிறைய வாசித்தார். வாசிப்பே அவரை ஒரு தலை சிறந்த எழுத்தாளனாக மாற்றியது என்றார்.

அவரது நாவல்களில் 'துறைக்காரன்' என்ற நாவல், நாவல் வடிவில் புதிய உத்திகளைக் கைக்கொண்டு எழுதப்பட்டதாகும். ஒரு நாள் சம்பவத்தை நாவலாக்கிய பெருமை அவருக்கு உண்டு என்றார்.

மேலும் அவர் தனதுரையில் 1930ம் ஆண்டு காலப்பகுதி நினைவுகளை மீட்டி வ.அ.படைத்த 'மண்ணிற் சமைந்த மனிதர்கள்' என்ற நாவல் அக்காலப்பகுதியை எம் மனக்கண்முன்னால் கொண்டு வருவது. அதே போன்று ஈழத்தின் சிறந்த வரலாற்று நாவலான 'கிரௌஞ்சப் பறவைகள்' எனும் நாவலும் வ.அ.வின் கை வண்ணத்திலேயே எழுந்தது என்றார்.

வ.அ.வின் நாவல் சிறுகதை, கவிதை தவிர்ந்த ஏனைய எழுத்துக்கள் பற்றிய ஆய்வினைச் செய்த கவிஞர் வாசுதேவன் தனதுரையில் 'வ.அ. தனது பத்தி எழுத்துக்களைத் தொகுத்து இலக்கிய நினைவுகள், பொச்சங்கங்கள் என்ற இரு தொகுப்புக்களைத் தந்துள்ளார். இதனைவிட அவரது பல எழுத்துக்கள் எமக்குக் கிடைக்காமல் இருக்கின்றன. அந்த வகையில் "வ.அ. வெறுமனே தகவல்களில் தங்கியிருக்கவில்லை. அவர் படித்துக் கேட்ட விடயங்களை தனது ஞாபகத்தில் வைத்துக்கொண்டு எழுதினார்.

தனது அனுபவங்கள் மூலம் மற்றவர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும் என்பதற்காக எழுதினார். அவரது அனுபவங்களே எழுத்துக்களாகின. உண்மையான கலைஞன் தனது அனுபவங்களில் மட்டுமே தங்கியிருக்க வேண்டும். வெறும் தகவல்களை நம்பக் கூடாது. இன்று வெறும் தகவல்களை மட்டுமே வைத்து பலர் சுயசரிதைகளை எழுதுகின்றனர். ஆனால் வ.அ.தனது அனுபவங்களை மட்டுமே நம்பி எழுதினார் என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய கவிஞர் அன்பழகன் குரூஸ் வ.அ.வின் இறுதி நேர சம்பவத்தைக் கூறும் போது வ.அ.வின் கடைசிப் புத்தகமான 'திணைக் கதைகள்' வெளியாகி அவரிடம் வரும்போது அவர் உயிருடன் இல்லை. அவரது இறுதி அஞ்சலியின் போது அந்தப் புத்தகத்தை அவரது மார்பில் வைத்தே அடக்கம் செய்யப்பட்டது பற்றி கூறினார்.

பார்வையாளர் பகுதியில் இருந்து கலாசூரி. வெற்றிவேல் விநாயகமூர்த்தி, கவிஞர் திக்கவயல் தர்மகுலசிங்கம், கவிஞர். ஆ.இ.பிரான்சிஸ் ஆகியோர் உரையாற்றினர். கவிஞர் மட்டுநகர் முத்தழகு கவிதாஞ்சலி செய்தார். இறுதியாக க.அருளப்பு நன்றியுரையாற்றினார்.

# ''கரையோரப் பிரதேசங்களுக்கும் ஊக்குவிப்பாளர் நியமனம் வேண்டும்''

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிற்கு வழங்கப்பட்ட "விவசாய ஊக்குவிப்பாளர் நியமனம்'' கரையோரப்பிரதேசத்திற்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் மறைந்த அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் ஜனாதிபதியிடம் முன் வைத்ததற்கிணங்க கூடிய விரைவில் அந்நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக வாக்குறுதியளித்திருந்தார். எனினும் பல மாதங்கள் கடந்தும் நியமனங்கள் வழங்கப்படாதது குறித்து கவலையடைவதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இநியமனங்கள் வழங்குவது சம்பந்தமாக அண்மையில் அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் (கச்சேரி) நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்திலும் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் யூ.எல்.எம்.முகைதீனும் சுட்டிக்காட்டியிருந்தார். ஆகையால் அம்பாறை மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்பட்டது போன்று கரையோரப் பிரதேசத்திற்கும் விவசாய ஊக்குவிப்பாளர் நியமன்த்தை வழங்க அமைச்சர்கள் முன்வர வேண்டுமென கோரிக்கையும் விடுக்கின்றனர்.

# மத்தியஸ்த சபையினரின் 130 பேர்கள் சமாதான நீதிவான்கள்!

(காரைதீவு நிருபர்)

நாடளாவிய ரீதியில் இயங்கிவரும் மத்தியஸ்த சபைகளின் உறுப்பினர்களில் 130 பேர் முதற்கட்டமாக சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் இந்நியமனங்களை நீதித்துறைச் சட்ட ஏற்பாட்டின் படி வழங்கியுள்ளார்.

இச்சமாதான நீதிவான் பதவி அவர்கள் சமாதான சபையில் அங்கம் வகிக்கும் காலத்திற்கு மட்டும் செல்லுபடியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு மத்தியஸ்த சபையின் எண்பது பேர் இம் முதற்கட்டத் தெரிவில் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ச.வெற்றிவேல், செ.கிருபைராஜா, வெ.ஜெயநாதன், க.முருகேசு, அ.திருநாவுக்கரசு, எஸ்.எம்.இசாக், எம்.அபூபக்கர், ஏ.எம்.நவாஸ், எம்.சி.செயின் ஆகியோரே அவர்களாவர். அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பேசும் பகுதிகளிலிருந்து காரைதீவு மத்தியஸ்தசபை மாத்திரமே முதற் தெரிவில் தெரிவானது.

# பொத்துவில் பஸ் சாலை

(கல்லாறு)

நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி லிமிடட், மேலும் ஒரு சாலையை பொத்துவிலில் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாக மேற்படி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கான ஒரு தொகுதிப் பொருட்களும், உபகரணங்களும், வந்து சேர்ந்து விட்டதாகவும், மிக விரைவில் பொத்துவில் சாலை திறக்கப்பட இருப்பதாகவும் தெரியவருகின்றது.

# நாவிதன் வெளயில் சமுர்த்தி வங்கிகள்!

(காரைதீவு நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பகுதியில் எதிர்வரும் 12 ஆந் திகதி இரண்டு சமுர்த்தி வங்கிகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இப் பிரிவிலுள்ள 20 கிராம சேவகர் பிரிவுகளில் 10 பிரிவுக்கு ஒரு சமுர்த்தி வங்கி என்ற ரீதியில் இரு வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் எம்.கோபால்ரெத்தினம் கூறினார்.

அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பியசேன இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

நாவிதன்வெளி மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் ரி.சபாரெத்தினம் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

# இராம கிருஷ்ண மிஷனின் துயர் துடைக்கும் சேவை; மனோ வளர்ச்சி குன்றிய சிறுவர் பாடசாலை திறப்பு

(அரியம்)

உலகத்தில் மக்களுக்கு பலவிதமான துன்ப துயரங்கள் எதிர்நோக்குகின்றன. அவர்களின் துன்பதுயரங்களைத் துடைக்கும் பணியில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பல வழிகளிலும் ஈடுபட வேண்டும் என கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தஜீ மகராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தின் விடுதியில் மனோவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான பாடசாலை திறப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தஜீ மகராஜ் தொடர்ந்து பேசுகையில்:

இன்று திறக்கப்பட்டுள்ள மனோவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலையானது இராம கிருஷ்ண புரத்தில் அமைந்துள்ளது ஒரு வரப்பிரசாதமாகும். துன்பப்படுபவர்களுக்கு ஆறுதல் கூறுபவர்கள் இன்று குறைவாகவே உள்ளனர். நாம் ஆலயத்தில் சென்று தெய்வங்களை வழிபடும் போது நடமாடும் கோயில்களாக துன்பப்படுவர்களுக்கு உதவுவதே சிறந்த சேவையாகும என்றார்.

கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ்.தேவசிங்கம் தலைமையில் இடம் பெற்ற திறப்புவிழாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மூத்த துறவி சுவாமி ஜீவானந்தஜீ ஆசி உரையை நிகழ்த்தினார். கல்லடி உப்போடை ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் தலைவர் சிறப்புரையாற்றுகையில் சுவாமி விவேகானந்தர் கண்ட கனவு இன்று நிறைவேறியுள்ளது என்றார்.

மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தமதுரையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இன்றைய போர்ச்சூழல் காரணமாக பெற்றோர்கள் மன உணர்சியுடன் வாழ்கின்றனர். மன உணர்ச்சியுடன் வாழும் பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியதாகக் காணப்படுகின்றது.

### இராமகிருஷ்ண மிஷன் செய்யும் அரிய சேவை

இந்நிலை மாற வேண்டுமானால் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள போர் உடனடியாக நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்பட வேண்டும். இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இதய சுத்தியுடனும் நேர்மையுடனும் தொடர்ந்து போர் நிறுத்தத்தை 3மாதங்களாக மேற்கொள்ள முன் வந்துள்ளனர். ஆனால் அரசாங்கம் அதற்கு செவி சாய்க்காமல் தட்டிக் களித்து வருகின்றது.

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் துறவிகள் எப்போதும் சாந்தி சமாதானத்திற்காக உழைப்பவர்கள் அவர்கள் இந்நாட்டில் சமாதானம் ஏற்பட பிரார்த்தனை செய்ய வேண்டும் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் பணி போற்றத்தக்கது. கடந்த 1978 சூறாவளியின் போது இங்குள்ள மக்களுக்கு அவர்கள் ஆற்றிய சேவை, 1990ம் ஆண்டு கலவரத்தின் போது அவர்கள் ஆற்றிய சேவை எல்லாம் மட்டக்களப்பு சமூகம் என்றும் மறக்காது என்றார்.

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா தமதுரையில் மட்டக்களப்பு ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தின் பவள விழா நிகழ்வில் இவ்வாறான மனோ வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலை திறந்திருப்பது பொருத்தமான ஒன்றாகும். சமூகசேவை அமைச்சிடம் மட்டக்களப்பில் வலது குறைந்தவர்களுக்கான பயிற்சிப் பாடசாலையொன்றை ஆரம்பிக்கும் படி கேட்டிருந்தேன். றோட்டார்க் கழகத்தின் மேற்பார்வையுடன் விரைவில் அவ்வாறான ஒரு பயிற்சிப் பாடசாலை ஆரம்பிபக்கப்படும் என்றார்.

மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் கே.கதிர்காமநாதன் தமதுரையில் அரசாங்கம் ஆற்ற வேண்டிய இவ்வாறான பணியை சமூகத் தொண்டர்கள் முன்வந்து ஆற்றுகின்றார்கள். சமூக சேவைத் திணைக்களத்தில் இப்பாடசாலையைப் பதிந்து மேலும் சில உதவிகளைப் பெறமுடியும். மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் பணி வளர வேண்டும் என்றார்.

மன வளர்ச்சி குன்றிய இப்பாடசாலைக்கு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தமக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழக்குவதாக உறுதியளித்தார்.

## வடக்கு கிழக்கில் போரினால் மூடப்பட்ட பாடசாலைகள்

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கில் உள்ள 1,995 பாடசாலைகளில் 172 தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பதிவுகள் தெரிவிக்கின்றன. இவைகளில் சில கடந்த இரு தசாப்த காலமாக மூடப்பட்டுள்ளன.

1,586 பாடசாலைகள் நிரந்தரமான இடங்களில் நடைபெற்று வந்தாலும், 231 பாடசாலைகள் வேறு வேறு இடங்களில் இயங்கு கின்றன. இதே வேளை 6 தனியார் பாடசாலைகள் யாழ் மாவட்டத்தில் இயங்கு கின்றன.

எனினும் இரு மாவட்டங்களிலும் 40 தேசிய பாடசாலைகள் உள்ளன.

அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொன்றும் 9 தேசிய பாடசாலைகளை உள்ளடக்கியுள்ளன. மேலும் மட்டக்களப்பில் 7உம், மன்னாரில் 6உம், யாழ்ப்பாணத்தில் 4உம், வவுனியாவில் 5 மாக தேசிய பாடசாலைகள் இயங்குகின்றன. இவைகளில் 172 பாடசாலைகள் பிரதானமாக போர் நடவடிக்கைகளால் மூடப்பட்டுள்ளன. இதில் 85 பாடசாலைகள் யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ளன. பிற மாவட்டங்களில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளில் விபரங்களாவன:

மன்னார் 21, கிளிநொச்சி 4, முல்லைத்தீவு 10, வவுனியா 12, திருகோணமலை 23, மட்டக்களப்பு 13, அம்பாறை 4.

## ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(வெல்லாவெளி நிருபர்)

ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறிகளைப் பயிற்றுவிப்பதற்காக பயிற்றப்படாத பயிலுனர் ஆசிரியர்களிடமிருந்து வண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகைமைகளாக இலங்கைப் பிரஜையாயிருத்தல், சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல், க.பொ.த.(சா/த) அல்லது தே.பொ.க.த. பரீட்சையில் முதலாம் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்றப்படாத ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவங்கள் (ஆங்கிலம் தவிர்ந்த) அதிபர், ஆசிரியர் கல்லூரி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2001 பங்குனி 15ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் உரிய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## அரச ஊழியர்களிடையில் இப்படியும் பாகுபாடு

(நற்பிட்டிமுனை நிருபர்)

மாகாண அரசாங்க சேவையில் நியமனம் செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் பணிபுரியும் சகல உத்தியோகத்தர்களும் மத்தியரசின் கீழ் உள்வாங்கப்படுவதற்கான விருப்புரிமைக் கடிதங்கள் கோரப்பட்டு, விருப்புரிமை கடிதங்களை அனுப்பி வைத்தனர். இதன் பின்னரே அவ்வுத்தியோகத்தர்கள் மத்திய அரசிலோ, மாகாண அரசிலோ விழா முற்பணம் விஷேட முற்பணம் போன்றவற்றைப் பெற முடியாதுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் உத்தியோகத்தர்கள் சம்பளக் கொடுப்பனவைத் தவிர ஏனைய எதுவிதக் கொடுப்பனவுகளையும் பெறமுடியாது சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ஒரே அலுவலகத்தில் கடமை புரியும் மத்திய அரசு ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் அதே வேளை மாகாண அரசிலிருந்து உள்ளீர்க்கபட்டுள்ளவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படாதது குறித்து கவலையும், அதிருப்தியும் அடைவதாக மேலும் தெரிவிக்கின்றனர்.

## திருமலையில் டெங்கு ஒழிப்பு

(திருமலை நிருபர்)

திருகோணமலை "வித்தியாலயம்" ஒழுங்கையில் மூன்று வயது சிறுவன் ஒருவன் டெங்கு நோயினால் பாதிக்கபட்டுள்ளான் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே திருமலை அரசடி கிராம சேவையாளர் பகுதியிலே நேற்றுக் காலை திருகோணமலை "திருக்கோணேஸ்வர இந்துக் கல்லூரி", சாரணர்களும், "புனித சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்" படையினரும் இணைந்து இப் பகுதியில் டெங்கு ஒழிப்புப் போராட்டம் ஒன்றிலே ஈடுபட்டனர்.

அத்தோடு, இப்பிரதேச மக்களுக்கு டெங்கு நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.

## தொலைபேசிக் கம்பிகள் திருட்டு

(கல்லாறு)

கோட்டைக்கல்லாறு பகுதியில் அடிக்கடி தொலைபேசி இணைப்புக் கம்பிகள் திருட்டுப் போவதாக மட்டக்களப்பு மாவட்ட தலைமையக ரெலிகொம் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திருட்டைத் தவிர்ப்பதற்கு கோட்டைக்கல்லாறு ஆலயங்களின் வண்ணக்கர் திரு.எஸ்.திருநாவுக்கரசுவின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளதாகவும், அவர் ஆலயங்களின் ஒலி பெருக்கிகள் மூலம் இதற்கான ஒத்துழைப்பை பொது மக்களிடம் கோர இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## கமநல சிற்றூழியர்கள் சம்பள அதிகரிப்புக் கோரி மகஜர்

(வந்தாறுமூலை நிருபர்)

கமநல கேந்திர நிலைய சிற்றூளிகர்களுக்கு சம்பளம் அதிகரிக்கக் கோரி தொழில் அமைச்சர் அலவி மௌலானாவிற்கு மட்டக்களப்பு மாவட்ட கமநலக் கேந்திர நிலைய சிற்றூழியர் சங்கம் மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது. அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பு மாவட்ட விவசாய கமநல கேந்திர நிலையங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு மேற்படி சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. அத்துடன் இது போன்ற எந்த ஒரு சலுகையும் இது வரையில் கிடைக்கவில்லை. கடுமையான முறையில் புறக்கணிக்கப்படும் எங்களுக்கு இவ் சம்பள அதிகரிப்பு வழங்க கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி சம்பள அதிகரிப்பு வழங்கப்படாவிட்டால் மட்டக்களப்பு மாவட்ட கமநல கேந்திரச் சிற்றூழியர் சங்கத்தின் ஊடாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக இவ்வமைப்பினர்

## அன்னமலையில் அதிரடிப்படை பாதுகாப்புடன் ஆலயக்கூட்டம்

(காரைதீவு நிருபர்)

அன்னமலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் புதிய நிருவாகத் தெரிவு அதிரடிப்படை பாதுகாப்புடன் வெள்ளியன்று (02.03.2001) காலை ஆலய முன்றலில் நடைபெற்றது. நாவிதன் வெளி பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் தலைமையில் இடம்பெற்ற இப்பொதுக் கூட்டத்திற்கு அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் என்.எஸ்.தியாகராஜா உட்பட 500க்கும் மேற்பட்ட ஊர் மக்களும் குழுமியிருந்தனர்.

அதிரடிப்படை பொறுப்பதிகாரி ஜி.பிரியந்தவும் சமூகமளித்திருந்தார். பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. பிரச்சினைக் குட்பட்டிருந்த இந்நிருவாகத் தெரிவு அன்று பெற்றது. இதிலுள்ள 12 குடிகளிலிருந்தும் 12பேர் தெரிவு செய்யப்பட்டனர். இந்தப் 12பேரிலிருந்து ஆட்சிப்பீடம் தெரிவு செய்யப்பட்டது. தலைவராக ஐ.பத்மநாதன், செயலாளராக ரி.யோகநாயகம், பொருளாளராக என். சண்முகலிங்கம், உபதலைவராக எஸ்.திஸ்ஸவீரசிங்கம், உபசெயலாளராக ஜே.தசபுத்திரன், கணக்காய்வாளராக ரி.பரமானந்தம் ஆகியோர் தெரிவு செய்யப்படனர்.

ஆலயத்தில் ஏலவேயிருந்த நிருவாக சபைக்கும் இடைக்கால நிருவாக சபைக்கு மிடையே இழுபறி நிலைமையும் ஏகப்பட்ட முறைப்பாடுகளும் பிரதேச செயலா

## மாணவர் சங்கத் தெரிவு

அண்மையில் மட்/சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் நிருவாகத் தெரிவும் இடம் பெற்றது.

தலைவர் சி.குழந்தைபேல்
செயலாளர்:- வ.றமேஸ் ஆனந்தன்
பொருளாளர்:- இ.நடராஜா
உபதலைவர்:- து.முரளிதரன்
உபசெயலாளர்:- இ.சர்வேஸ்வரன்

நிருவாக சபை உறுப்பினர்கள்
சா.இராஜேந்தின்
செல்வி.கா.குணநாயகி
ம.சிவசுந்தரம்
திருமதி.க.துர்ரைராஜா
செல்வி.சா.லலிதா

# ஹஜ் சிறப்பிதழ்

## விடிவைக் காணும் நாள் வந்தால்....!

**புன்னகைவேந்தன்-மருதமுனை**

நீலவானப் பந்தலிலே நித்திலமாக ஒளிவீசும்
சீலம் கொண்ட துல்ஹஜ்ஜின் பத்தாம் நாளின் பிறையே நீ!
தரைக்கு இறங்கி வாராயோ! உரைக்கும் செய்தி கேளாயோ!
ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடும்
எண்ணம் மனதில் எனக்கில்லை!
அத்தர் வாசனை பூசி உலாப்போகும்
எண்ணமும் எனக்கில்லை!
புத்தாடைகள் அலங்காரம்
புதினம் எதுவும் வேண்டாமே!
சித்தம் குலைந்த நிலையில் நான்
சோபை இழந்து நிற்கின்றேன்!

அருந்தவநாதன் தோட்டத்தில்
உருளைக் கிழங்கு வெங்காயம்
பெருந்தனமிட்டுப் பயிர் செய்தார்!
வடக்கில் வாழந்த றகுமானே!
அருந்தவநாதன்~றகுமானின்
உறவும் மிகவே இருந்ததுவே!
வேற்றுமை கலவாப் பெருவாழ்வும்
வனப்புடன் அங்கே விளங்கியதே!

நோன்புப் பெருநாள் ~ தைப்பொங்கல்
பிறந்தால் அங்கே குதூகலந்தான்!
ஹஜ்ஜுப் பெருநாள் ~ தீபாவெளி
பண்டிகை எல்லாம் பரவசந்தான்!
முத்துத் தமிழாம் தாய்மொழியால்
சித்தம் மகிழ்ந்து வாழ்ந்தாரே!
இஸ்லாம் ~ சைவம் புரிந்துணர்வும்
இலங்கியதங்கே இன்புற்றோம்!

இவ்வாறெல்லாம் சாந்தியுடன்
இரண்டறக் கலந்து வாழ்ந்தவரை
அகதி முகாமில் காணுகின்றோம்!
அவலம் அழிவும் தொடர்கதையோ?
வடக்கில் வாழந்த மக்களெல்லாம்
வளங்கள் இழந்து பொற்பிழந்தார்!
"இடக்குத் தீரும் நாள் வருமா?"
இதயம் நொந்து அழுகின்றார்!

துப்பாக்கி ரவையும் குண்டுகளும்
துவசம் செய்தால் இம் மண்ணில்
எப்படி வருமோ சமாதானம்?
இதயம் கலங்கித் துடிக்குதம்மா!
யுத்தம் வேண்டாம்! வேண்டாமே!

பேரினவாதப் பேரரக்கன் புகழும் வார்த்தை எல்லாமே
மக்கள் மனதைப் புண்ணாக்கும் நஞ்சைக் கக்கும் பாணங்களே!
யுத்தம் தொடரும் தொழிலொன்றால்
ஈட்டும் இலாபம் பேரழிவே!
சிங்களம் பௌத்தம் மட்டும் தான்
இலங்கை அரசின் இலக்கானால்
பொங்கும் குருதி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த முடியாதே!

அகதி முகாமில் அடைபட்டோர்
அவலம் தீர்க்கும் நாள் வந்தால்
சக்தி வாழ்வில் புதையுண்டோர்
விடிவைக் காணும் நாள் வந்தால்
மலரும் அந்த நந்நாளே
மகிழ்வைத் தந்திடும் பெருநாளே!
புலரும் அந்நாள் வரும் வரையில்
பெருநாள் எதுவும் வேண்டாமே!

வெளிநாட்டுப் பொதிகளை கிழக்கு மாகாணத்துக்குத்
தருவிக்க குறைந்த கூலி & உத்தரவாதத்துடன்

**Batticaloa Transport**

இல: 64,
சென்ரல் றோட்,
கொழும்பு -12
தொ.பே.: 424469

எஸ்.எஸ்.எம்.சொலுக்கார்
& பிறதர்ஸ்
72, 74, 76, 90 பசார் வீதி,
மட்டக்களப்பு
Advt.

065-22755ல் தொடர்பு கொண்டால் விசேட கழிவு

# தியாகத்தை வலியுறுத்துவதே ஹஜ்ஜுப் பெருநாள்

**மௌலவி ஏ.சி.எச்.எம்.பௌசுல் அமீன்**

இன்று நாம் தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஏன் இந்தப் பெருநாள் கொண்டாடப்படுகிறது? எதற்காக நாம் கொண்டாட வேண்டும்? என்பதை இன்று நாம் நினைவுப்படுத்திக் கொள்வோம் மனிதன் அவனது வாழ்வில் பல தியாகங்கள், கஷ்டங்கள், இன்னல்கள் துன்பங்கள் பலவற்றை கடந்த பின்னர் தான் எதற்காக கஷ்டப்பட்டா னோ அதை அடைந்து கொள்கி றான். அவற்றைக் கொண்டு சந்தோஷமடைகிறான். இதனால் அவனது வெற்றி உறுதிப்படுத்தப்படுகிறது. உலக நடைமுறையில் நாம் ஒப்பிட்டுப்பார்க்கும் போது இன்று மனிதன் எதற்கெல்லாம் தியாகம் செய்து கொள்கிறான். தியாகம் செய்து செய்து இறுதியில் தனது உயிரைக் கூட மாய்த்துக் கொள்கிறான். இந்தளவிற்கு அவனது தியாகம் உயர்வடைகின்றது.

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு குடும்பம் செய்த தியாகத்தை நினைவு கூர்வதுதான் எமது இன்றைய பெருநாளின் நோக்கமாகும். ''அல்லாஹ்வின் தோழர்'' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்கள் ஹஸ்ரத் இப்றாஹீம்(அலை) அவர்கள் இறை கட்டளையை மதித்து பல்வேறுபட்ட தியாகங்களைச் செய்தார்கள். அந்தத் தியாகங்களை மையமாகக் கொண்டுதான் இஸ்லாத்தின் 5 வது கடமையான புனித ஹஜ் கடமை உருவாக்கப்பட்டது. அப்படித்தான் என்ன தியாகம் செய்தார்கள்? இன்றைய நவீன காலத்தில் யாரும் செய்ய முடியாத தியாகத்தைத்தான் அவர்கள் செய்தார்கள். தனது அருமை மனைவியையும், பச்சிளங் குழந்தையையும் தன்னந்தனியே அரேபிய பாலைவனத்தில் கொஞ்ச பேரீத்தம் பழத்துடனும், நந்நீருடனும் விட்டு இறையழைப்பை ஏற்று சென்று விட்டார்கள். இவர்கள் படைத்த இறைவனுக் காக வேண்டி இவ் இருவரையும் விட்டுச் சென்றார்கள். இது அவர் செய்த பெரும் தியாகம். இந்நிகழ்வின் பிற்பாடு இறையுதவி கிடைத்தது. ''ஸம் ஸம்'' எனும் வற் றாத ஊற்றின் மூலம் பச்சிளம் பாலகன் இஸ்மாயீலின் தாகம் தீர்க்கப்பட்டது. அன்னை ஹாஜாரா (அலை) அவர்கள் தனது குழந் தைக்கு தண்ணீர் புகட்டவென இரு மலைகளுக் கிடையில்(சபா-மர்வா எனும் மலைகள்) ஓடி அலைந்து தண்ணீர் தேடிய சமயத்தில் தான் அந்தப் பாலகனின் பாதத்தினடியில் நீர் ஊற்றெடுத்தது. அந்த நேரத்தில் தான் தாயார் ஸம் - ஸம்(நில்-நில்) என்றார்கள். இன்று வரை வற்றாத ஊற்றாக அது சவூதி அரேபிய மக்களுக்கு நீர் வழங்கிக் கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்களது தியாகத்தின் இரண்டாம் கட்டத்தை எடுத்து சற்று ஆராய்வோம். தனது வயது முதிர்ந்த காலத்தில் கிடைத்த ஆண்மகவுதான் ஹஸ்ரத் இஸ்மாயில்(அலை) அவர்கள் அப்படிக் கிடைத்த ஒரு குழந்தையுடன் எவ்வளவு பாசம், கருணை, இரக்கம், அன்பு கொண்டதாக வளரும் குழந்தையை அறுக்கும் படி இறை கட்டளை வருகிறது. அதற்கு தாயாரான நபியவர்களுக்கு சுவனத்தில் இருந்து ஓர் ஆட்டை அனுப்பி அதை அறுத்துப் பலியிட உத்தரவு வந்தது. அதை அறுத்துப் பலியிட்டார்கள்.

அன்று அவர்கள் செய்த தியாகத்திற்காகத்தான் இன்று நாம் ஹஜ் பெருநாள் கொண்டாடுகின்றோம். பெருந்நாள் தொழுகைக்குப் பின் இருந்து அடுத்து வரும் நாட்களான அய்யாமுத் தஷ்ரீக் எனும் நாட்களான துல்ஹாஜ் பிறை 11,12,13ம் தினங்கள் உழ்தறிய்யா எனும்(அறுத்துப் பலியிடுதல்) சுன்னத்தான அதுவும் கண்டிப்பான ஒரு சுன்னத்தை வணக்கத்தை நிறைவேற்றி வருகிறோம். இதன் மூலம் எத்தனை ஏழை பெரியவர்கள், வறுமைப்பட்டவர்கள் இந்தப் பெருநாள் தினங்களில் சந்தோஷமாக உண்டு களிக்க வாய்ப்பளிக்கிறது புனித இஸ்லாம். ஹாஜிகள் கூட இந்த நாட்களில் ஹஜ்ஜின் போது இந்த அலை நிறைவேற்றுகிறார்கள். அன்று அவர்கள் செய்த தியாகம் இன்று வரை பேசப்படுகிறது. உலகம் அழியும் வரைக் கும் இந்த வரலாறு பேசப்படும்.

இவ்வாறான பல தியாக நிகழ்வுகளை மையமாக வைத்துத் தான் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படுகிறது. இஸ்லாம் தியாக உணர்வோடு பின்னிப் பிணைந்த ஒரு மார்க்கம் தியாக மனப்பாண்பு, தியாக உணர்வு வளர்க்கப்பட வேண்டும். அப்போது தான் தனி மனிதன் வளம் பெறுவான் அவன் வளம் பெற்றால் அந்த சமூகத்தில் ஒரு வளம் உருவாகும். இதனால் மனித சமூகம் நல்ல சமூகமாகத் திகழும். குறிப்பாக படைத்த இறைவனுக்காக எதனையும் தியாகம் செய்யும் பண்பு எம்மிடம் திகழ வேண்டும் என்று இந்தப் பொன்னான நாளில் கூறிக் கொள்வதில் பெரும் மகிழ்வடைகிறேன் (அல்ஹம்து வில்லாஹ்)

தயாரிப்பு: பௌஸியா ராஜா

நங்கையர், ஆடவர்களுக்கான சகலவிதமான
நவநாகரிக டிசைன் தங்க நகைகளுக்கு நாடுங்கள்

**MJ மொடேர்ண் ஜூவலர்ஸ்**

இல: 18, மத்திய வீதி,
மட்டக்களப்பு
தொ.பே. : 065-22528

இல: 32, கடற்கரை வீதி,
காத்தான்குடி - 04
தொ.பே. : 065-45081

விஷேட 10 % விலைக்கழிவு

LEADERSHIP MAKES THE DIFFERENCE

**Blue Lagoon**

For Smart People


117, Trinco Road, Batticaloa. T.P.23280



நங்கையர்/ ஆடவர் விரும்பும் நவநாகரீக டிசைன் ஆடைகளுக்கு நாடுங்கள்.

*மேல்மாடி காட்சியறையில்.....*
ஆடவர்களுக்கான 'ட்ரௌசர்ஸ்', 'ஷேர்ட்ஸ்', ரீஷேர்ட்ஸ் மற்றும் நங்கையர்க்கான சாரி வகைகள் பேபி சூட்ஸ்.......

*கீழே......*
நங்கையர்களுக்கான ரெடிமேட் ஆடைகள், சல்வார், ஸ்கேர்ட் & பிளவுஸ் சிறுமிகளுக்கான நாகரிக 'பார்ட்டி' வ்றொக்ஸ்.



Advt.

# ஹஜ் சிறப்பிதழ்

## இருள் அகன்ற ஈமானிய இதயங்களின் தியாகத்தின் பயணம்

'இஸ்லாம்' ஒரு "பூரண வாழ்க்கைத்திட்டமாகும்" அது அன்றைக்கும் இன்றைக்கும் ஏன் என்றைக்குமே வாழ்க்கை முறையாக இருப்பதனை அதனை பூரணமாக புரிந்து கொள்வதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.


இஸ்லாத்தை 'தியாகம்' என்றும் கூறலாம் தியாகத்தின் மூலம் உருவானதே இஸ்லாம். இஸ்லாமிய கோட்பாடு மனித வாழ்க்கையை மிகவும் உயர்ந்த ஒரு இலட்சியத்தை உடையதாக ஆக்குகிறது.

இஸ்லாமிய வாழ்க்கை, வாழ்வின் எந்தவொரு பகுதிக்கும் விளக்கத்தையும் அதற்கான விதிகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இறைவனின் இறுதித் தூதர் தனது இஸ்லாமிய பிரசாரத்தின் போது பிரசாரம் மட்டும் செய்திருக்கவில்லை. அவர் சொன்னது போல் வாழ்ந்தும் காட்டியதால்தான் இஸ்லாம் அன்றைய காட்டுமிராட்டி மனிதர்கள் மத்தியில் வெற்றியை ஈட்டித் தந்தது.

இஸ்லாத்தின் அடிப்படையே மனிதன், மனிதனுக்கோ அவனின் சொயற்பாடுகளுக்கோ, அல்லது அவன் உருவாக்கிய எதுக்குமே தலை சாய்ப்பது இல்லை. இறைவன் ஒருவனுக்கே மனிதனானவன் தலை சாய்த்து வணங்க வேண்டும் என்பதாகும்.

### இஸ்லாத்தின் ஐந்தாவது கடமை

இறுதிக் கடமை ஹஜ் செய்வதாகும். 'ஹஜ்' என்ற சொல்லின் பொருள் "புனித இடத்தை நாடிச்



செல்லல்" என்பதாகும். பண வசதி படைத்தவர்கள் தமது இறுதிப் பயணத்துக்கு ஒப்பான ஒரு நீண்ட பயணமாக இதைக் கருதலாம். இஸ்லாத்தின் 5 கடமைகளும் வாழ்வியலோடு இறை வணக்கத்தையும் கொண்டதாகவே இருக்கின்றது. இறுதிக் கடமையான ஹஜ் கடமையில் கூட தனது உற்றார் உறவினர்களுக்கு செய்ய வேண் டிய அனைத்து விதமான கடமைகளையும் செய்துவிட்டுத்தான் ஒரு முஸ்லிம் தனது ஹஜ் கடமையை செய்ய வேண்டும் என்பது விதியாகும.

### ஹஜ் ஒரு தியாகம்

தியாகத்தில் வளர்ந்தது தான் இஸ்லாம். தியாகமே எந்தவொரு செயலையும் தூய்மையாக்கும், புனிதமாக்கும். எந்தவித சுய இலாபமும் இல்லாமல் சுய தேவை யில்லாமல் மனித நல்வாழ்வையும் அவனது ஒழுக்கத்தின் கோட்டில் வழுவாமல் வாழ்வதற்காக உருவானதே அந்த தியாகங்கள். இஸ்லாமிய் பிரச்சாரத்தின் போது இறை தூதர் இறைவனுக்காகவே தமது வாழ்க்கையை வ்ழ்ந்து காட்டினார் கள்.

இறைவனின் வாக்கை நிறைவேற்றுவதற்காக கட்டளையை சிரம் ஏற்ற இப்றாஹீம் (அலை) அவர்களின் தவம் இருந்து பெற்ற குழந்தையையே வெட்டத் துணிந்த தியாகத்தை பின்னணியாக வைத்து உருவானதாகும் இந்த ஹஜ் கடமையாகும்.

தனது சொந்தங்களை, மனைவி மக்களை நாட்டை வீட்டை எல்லாவற்றையும் விட்டு பயண மாவது பெரும் தியாகமாகும்.

அறபாத் மைதானத்தின் கொழுத்தும் வெயிலில் நின்று இறைவனை துதித்தல் என்பன தியாகத்தின் சின்னங்களாகும்.

### ஹஜ் பேதங்களைக் களைதல்

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னர் அறபு நாட்டில் பல்வேறு வேற்றுமைக்ளும் பேதங்க ளும் மலிந்து காணப்பட்டன. உயர் ந்த குலத்தினர் தாழ்ந்த வகுப்பினர், அரசன்-

**பௌஸியா ராஜா**

அடிமை, ஏழை-பணக்காரன், என்ற பேதமையில் என்ற நிலையில் அன்றைய சமூகம் அறியாமையில் வீழ்ந்து கிடந்தது. நபியவர்களின் செயல்கள் அங்கு நிலவிய பேதமையை களைவதாக இருந்தது. அத னால். தான் சொல்ல இயலாத கொடுமைகளை அவர்கள் நபியவர்களுக்கு செய்தார்கள். இறைவனிடத்தில் எல்லோருமே சமன். நன்மை செய்வதன் மூலமே என்னிடத்தில் ஒருவன் உயர்ந்தவன் ஆக முடியும் என்று அல்லாஹ் கூறுகிறான். அந்த வகையில் ஹஜ்ஜின் போது எல் லாத் தேசங்களிலும் இருந்து வரும் இலட்சோப இலட்ச மக்கள் ஒன்று கூடி நின்று ஒரே மொழியில் இறைவனைத் துதித்து நாட்டின் ஜனாதிபதியும் கூலி வேலை செய்வபவனும் கையேடு கைகொடுத்து வாழ்த்துக் கூறிக் கொள்ளும் காட்சியே உள்ளத்தை அள்ளும் ஒற்றமைக் காட்சியாகும்.

கோடி கோடியாகப் பணம் குவித்து கிடந்தாலும் மிகச் சாதாரண வெள்ளை நிறத்திலான தூய ஆடையை அங்கு எல்லோருமே அணிந்து கொள்வர். பிறந்த குழந்தையின் உள்ளத்தைப் போன்ற உள்ளத்துடன் அந்த தூய வெண்மை ஆ்டையில் பேதமை என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாமல் கூடி நின்று வணங்குவர்.

ஹஜ்ஜின் கடமையின் போது செய்யப்படும் அனைத்து செயற்பாடுகளும் தூய்மையானதாகவும், தியாகம் நிறைந்தவையாகவும், ஒற்றுமையின்; பேதமின்மையின் சான்றாகவும் அமைந்து விடுவது அதன் சிறப்பம்சமாகும்.


அந்த வணக்கத்தை பூரணமாக இறைவனின் பாதையில் செல விட்டுவிட்டுத் திரும்பும் ஒரு மனிதன் வெள்ளை உள்ளம் கொண்ட உள்ளத்தை உடையவனாக இருப்பான். இஸ்லாத்தின் இறுதித் தூதர் நபி (ஸல்) அவர்களின் தோழர்களின் அடக்கத் தளங்களையும் தருசிக்கும் பாக்கியம் இதன் போது கிடைக்கின்றது. இத்தகைய மகத்தான கருத்துக்களைக் கொண்ட ஹஜ் கடமையை நாமும் அர்த்தமுள்ளதாகப் பூரண ஈமானிய இதயத்துடன் செய்து அல்லாஹ் வின் பார்வையில் நன்மைகள் நிறை ந்த அழகுள்ள மனிதனாகுவோமாக!

'அல்ஹம்துலில்லாஹ்' எல்லாப் புகழும் அல்லாஹ்கே உரியது. அவனையன்றி தலை வணங்க வேறு நாயகனில்லை.

கணனி வடிவமைப்பு: எஸ். மணி

'வயரிங்'க்குத் தேவையான உபகரணங்கள்,
சகல விதமான நவீன மின்சார சாதனங்கள்
மற்றும்
அன்பளிப்புப் பொருள்களுக்கு
நாடுங்கள்
நியூ மொடேர்ன் எலக்ட்ரிக்ல்ஸ்
இல: 20A, மத்திய வீதி,
மட்டக்களப்பு
Advt.

ஆடைகளில் ஒரு புதிய கலாசாரம்
சுப்பர் செலக்ஷன்
நவீன உலகின் தேவைகளுக்கேற்ற
ரெடிமேட் கார்மன்ஸ்



இன்னும்.........
ஷேர்ட்ஸ், சல்வார், டெனிம் ட்ரௌசர்ஸ் பார்ட்டி ப்ரொக்ஸ்
அனைத்திற்கும்
காத்தான்குடியில் ஒரு தனித்துவமான நிறுவனம்.
சுப்பர் செலக்ஷன்
28, மெயின் வீதி,
காத்தான்குடி -03
தொ.பே. : 065-47225
Advt.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
ஹஜ் பெருநாள
வாழ்த்துக்கள்
Dress Well
BATTICALOA.
T.P: 065 - 22079
Advt.

ஏறாவூரில்............
ரேடியோ, ரீவி, தையல் மெஷின், மின்விசிறி, மணிக்கூடுகளுக்கான உதிரிப் பாகங்கள்
நில்கமல் பிளாஸ்டிக் கதிரைகள்
பஜாஜ் மின்விசிறிகள் மற்றும்,
எலக்ட்ரோனிக், எலக்ரிக் சாதனங்கள்
அன்பளிப்புப் பொருள்களுக்கு
நதீஸா காட்சியறை
பிரதான வீதி,
ஏறாவூர்.
தொ.பே.; 065-40707
Advt.

# ஆப்கானிஸ்தானிய சிலைகள் உடைப்பு!

## உலகின் கோபப் பார்வையில் தாலிபான்

ஆப்கானிஸ்தானிலுள்ள சிலைகளை உடைப்பதால் கோபத்தில் கொதித்துப் போயிருக்கும் உலக நாடுகளின் வேண்டுகோள்களையும் பொருட்படுத்தாமல் ஆப்கானிஸ்தானின் பண்டைய நினைவுச் சின்னங்களை தாலிபான் இயக்கம் அழித்து விட்டது. இன்னும் எஞ்சியிருக்கும் பாமியான் புத்தர் சிலைகள் உட்பட எல்லா சிலைகளும் அழிக்கப்பட்டு விடும் என்று நேற்று முன்தினம் தாலிபான் அதிகாரிகள் கூறினர்.

பாமியான் புத்தர் சிலைகள் மூன்றில் இரண்டு பகுதி வெடி பொருட்கள்,ராக்கட்டுகள், பீரங்கி குண்டுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஏற்கனவே உடைக்கப்பட்டு விட்டன என்று ஆப்கானிஸ்தானின் செய்தி அமைச்சர் ஜமால் கூறினார்.

கால்களும் தலைகளும் சிதைக்கப்பட்ட பாமியான் புத்தர் சிலைகளின் எஞ்சியபகுதிகளை இப்போது தாலிபா படைகள் உடைத்துக் கொண்டிருக்கின்றன.

கையில் கிடைப்பதையெல்லாம் எடுத்து அவர்கள் சிலைகளை உடைப்பதாக அமைச்சர் கூறினார். இதனிடையே யுனஸ்கோ பிரதி நிதி ஒருவர் பாகிஸ்தானிலுள்ள தாலிபான் பிரதிநிதி ஒருவரை சந்தித்து ஏற்கனவே உலக நாடுகளுடன் குழப்ப நிலையில் இருக்கும் தாலிவான் அரசின் நிலமை இந்த சிலை உடைப்பினால் மேலும் மோசமடையும் என்று தெரிவித்தார்.

ஆனால் தமது தலைவர் முல்லா உமர் பிறப்பித்த மதக் கட்டளைகளை மாற்ற இயலாது என்றும் இஸ்லாமிய நாடுகளில் சிலைகளுக்கு இடம் இல்லை என்றும் தாலிவானின் தூதுவர் கூறிவிட்டார்.

காபோல் அருங்காட்சியகத்தில் சுமார் ஆறாயிரம் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. மலை முகட்டில் உள்ள பாறையில் 175 அடி உயரத்திலும் இரண்டு பிரமாண்டமான புத்தர் சிலைகள் செதுக்கப்பட்டிருந்தன.

## காஷ்மீரில் குண்டுத்தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் 16 பேர் காயம்

(ஜம்மு)

காஷ்மீரின் தெற்குப் பகுதியில் உள்ள ஆஸாக்குஞ்ச் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற எறிகுண்டு வெடிப்பு ஒன்றில் பாதுகாப்பு படையைச் சேர்ந்தவர்கள் 17பேர் காயமுற்றனர்.

தீவிரவாதிகள் வீசிய இந்த கைக்குண்டு வீச்சில் காயமுற்ற 17 பேரில் சிலரது நிலை கவலைக்குரியதாக உள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

ஜம்மு காஷ்மீரின் மாவட்டத்தின் நகரத்தின் பகுதிகளில் தீவிர வாதிகள் நடத்திய கொடூர கொலைகளை கண்டித்து நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

முதலமைச்சர் பொறுப்பை தற்காலியமாக நிர்வகிக்கும் குலாம் முஹைதீன் சயி மாநில காவல் துறை இயக்குனருடன் சந்தித்து நிலமையை ஆராய்ந்தார்.

ரஜோயோடியில் ஒரு காவல் குழு மீது நடந்த தாக்குதலில் 15 பொலிஸாரும் இரண்டு மருத்துவ உதவியாளர்களும் இறந்த சம்பவத்துக்கு பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தொய்பா தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றிருக்கிறது.

தொய்பா தீவிரவாதிகள் இத்தாக்குதலை தீவிரவாத ஹிஸ்புல் முஜாஹிதீன் இன்னும் இரண்டு தீவிரவாத அமைப்புக்களும் உதவியதாக தீவிரவாத அமைப்புக்களின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## 20இலட்சம் மக்கள் மக்காவில்


இறை தூதர் நபிகள் நாயகம் தனது கடைசி சொற்பொழிவை ஆற்றிய அரபாத் என்னும் மைதான திடலில் வளாகத்தில் உலகம் எங்கும் இருந்து திரண்டுள்ள சுமார் 20 இலட்சம் ஹஜ் யாத்திரியர்கள் புனித ஹஜ் தொழுகை நடாத்துவார்கள்.

இந்த ஆண்டில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் இந்திய முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரையில் பங்கேற்கின்றனர். காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா முன்னதாகவே உயர் மட்ட தூது குழுவினருடன் சவூதி அரபியா சென்றுள்ளார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## குழந்தைகள் கொழுக்க கொழுப்புச்சத்தா?



குழந்தைக்கு சத்தான உணவு கொடுக்க வேண்டும் என்பார்கள். ஆனால் கொழுப்பு சத்து அதிகம் கொண்ட உணவு கொடுப்பது நல்லது இல்லை என்று ஆராய்ச்சி தெரிவிக்கிறது. கனடா டொரண்டோவில் உள்ள பேகிரஸ்ட் மையம் இதுபற்றி ஆராய்ச்சி நடத்தியது. அதன்படி எலிகளுக்கு கொழுப்பு சத்து உணவு அதிகம் கொடுத்து பரிசோதிக்கப்பட்டது. அப்படி கொழுப்பு சத்து உணவு அதிகம் சாப்பிட்ட எலிகளுக்கு உணர்வு மழுங்கி போவது கண்டுபிடிக்கப்பட்டது. கொழுப்பு ஏறினால் குணம் கெட்டுப்போகிறது. எனவே கொழுப்பு சத்து உணவை குழந்தைகளுக்கு ஊட்டினால் ஞாபகசக்தி குறைவு ஏற்படும். மூளை வளர்ச்சி பாதிக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கூரையில்லாத வகுப்பறைகளையும் மரத்தின் கீழ் தரையிலமர்ந்து படிப்பதையும் இங்குதான் காண்கிறேன்

(காரைதீவு நிருபர்)

– சம்மாந்துறையில் ''யுனிசெவ்'' பிரதிநிதி –

''இப்பிரதேசத்தில் விஜயம் செய்தபோது கூரையில்லாத வகுப்பறைகளையும், போதிய கட்டிடங்களில்லாத நிலமைகளையும் காண நேரிட்டது. மாணவர்கள் தரையிலமர்ந்து வசதியீனங்களுக்கு மத்தியில் படிப்பதையும் கண்ணுற்றேன். அனைத்துக்கும் காரணம் நாட்டில் நிலவும் யுத்தம் தான் என எண்ணுகிறேன்.''

என்று சம்மாந்துறை வலய 40 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 10 நாள் செயலமர்வை முடித்து வைத்துப் பேசிய ''யுனிசெவ்'' நிறுவன பிரதிநிதி மொனிக்கா மார்ட்டின் குறிப்பிட்டார்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் சம்மாந்துறை வலய முன்பள்ளி அபிவிருத்திக்குப் பொறுப்பான உ.க பணிப்பாளர் கே.எல்.எம்.ஹாசிம் தலைமையில் இச்சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது.

சம்மாந்துறை வலயத்திலுள்ள 315 முன்பள்ளிகளில் பயிலும் 10 ஆயிரம் சிறார்களை கற்பிக்கும் ஆசிரியர்களுள் 40 பேருக்கு ''யுனிசெவ்'' இப்பயிற்சியை வழங்கியது. அங்கு மொனிக்கா மாட்டின் மேலும் பேசுகையில்

இலங்கை அழகான ஒரு நாடு. விரைவில் இங்கு யுத்தம் முடிந்து சமாதானம் நிலவும் என எண்ணுகிறேன். கல்வி கற்பது மாணவர்களின் உரிமை, கல்வியை வழங்க வேண்டியது அரசினது கடமை குறிப்பாக 3-5 வயது சிறார்களுக்கு உரிய கல்வி வழங்க வேண்டும் என்றார். மேலதிக வலய கல்விப் பணிப்பாளர் சா.பாக்கியநாதன், பவானி பாக்கியநாதன், உதவிக் கல்விப்பணிப்பாளர்களான எம்.ஹுசைன், வி.ரி.சகாதேவராஜன், என்.செல்வநாதன், ஐ.ஏ.றகூல், எஸ்.எம்.அலியார், கே.செல்லத்துரை உட்பட பலரும் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## வன்னிக்கு செல்லவிருக்கும் ஆயர்களின் நல்லெண்ண யாத்திரை

ஆளும் பொது ஜன முன்னனி முக்கிய பிரமுகர்களை வன்னிக்கு அழைத்துச் செல்வதற்கு மன்னார் ஆயர் வணக்கத்திற்குரிய ராயப்பு ஜோசப் ,யாழ் ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் ஆய்த்தமாகி வருகின்றனர்.

தற்போதய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் விடுதலைப் புலிகளுடன் நல்லெண்ணத்தை வளர்க்கும் நோக்கத்துடன் வன்னிக்கான இந்த நல்லெண்ண விஜயத்திற்கான முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆயர்கள் நேற்று வெள்ளிக்கிழமை மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் அமைச்சருமான தினேஸ் குணவர்தனாவை சந்தித்து இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

பொது ஜன முன்னணி உயர் மட்டத்தின் கவனத்திற்கு தான் கொண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மன்னார். ஆயர் வணக்கத்திற்குரிய ராயப்பு ஜோசப் தகவல் தெரிவிக்கையில்

நோர்வேயின் சமாதான முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கையில் பிரித்தானியா விடுதலைப் புலிகளை தடை செய்ய எடுத்துள்ள முடிவு நோர்வேயின் சமாதான முயற்சிக்கு சற்றுப் பின்னடைவை ஏற்படுத்தலாம்

இந் நிலையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நல்லெண்ண சூழல் ஒன்று ஏற்பட வேண்டும் இதற்காகவே வன்னிக்கான நல்லெண்ண விஜயம் ஒன்றிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றார்.

## காகித ஆலைக்கு பழைய காகிதங்கள் தேவை

(கல்லாறு)

வாழைச்சேனை காகித ஆலையின் ஜனவரி மாத உற்பத்தி 600 தொன்னாக காணப்பட்டது. ஆனால் 28 நாட்களை மட்டுமே கொண்ட பெப்ரவரி மாதத்தில் அதன் ரித்துள்ளது. இதனால் பெப்ரவரிமாத உற்பத்தி 850 தொன்னாக காணப்படுகின்றது. ஆலையின் மாதாந்த இலக்கு 1500 தொன்னாக இருந்த போதும், இலக்கை அடைய முடியாமைக்கு பழைய காகிதங்கள் போதியளவு கிடைக் ஆலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது முக்கிய மூலப் பொருளான பழைய காகிதங்களைக் கொள்வனவு செய்வதற்கு புதிய அணுகு முறைகள் கடைப்பிடிக்கப்பட இருப்பதாக

## கிராமிய தொழிற்பயிற்சி நிலையம் சாய்ந்தமருதுக்கு வேண்டும்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்கு தனியான கிராமிய தொழிற்பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்தித் தருமாறு கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு , புனரமைப்பு, கிராமிய வீடமைப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரஃபிடம் தேசிய முஸ்லிம் கவுன்ஸில் சாய்ந்தமருதுக் கிளை கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய முஸ்லிம் கவுன்ஸில் சாய்ந்தமருது அமைப்பாளர் ஏ.எம்.உவைஸ், அமைச்சர் பேரியலுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தொழில் நுட்பக்கல்வி, மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் கிராமிய தொழிற்பயிற்சி நிலையங்கள் பிரதேச செயலகங்கள் ரீதியாக அமைக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பிரதேச செயலகப் பிரிவுகளில் இத் தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

எனவே அண்மையில் பிரதேச செயலக அந்தஸ்த்தைப் பெற்றுக் கொண்ட சாய்ந்தமருதிலும் இவ்வாறான தொழிற்பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்தித் தருமாறு அக் கடித்தத்தில்




# 2வது பாதியில் இந்திய அணி சோர்வு: விறுவிறுப்பாக ஆடி ஜெர்மனி வெற்றி

இந்திய அணிக்கு எதிரான ஹாக்கிப் போட்டியில் ஜெர்மனி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

### சர்வதேச ஹாக்கி

நட்பு முறை பயணமாக ஜெர்மனி ஹாக்கி அணி இந்தியா வந்துள்ளது. ஏற்கனவே இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்த அடிப்படையில் 3 போட்டிகள் கொண்ட ஹாக்கித் தொடரில் இந்தியா-ஜெர்மனி அணிகள் ஆடின. இதன்படி சென்னையில் 3-வது மற்றும் கடைசி ஆட்டம் நேற்று நடந்தது. மும்பையில் நடந்த முதல் ஆட்டத்தில் ஜெர்மனி 1-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை தோற்கடித்தது. இதையடுத்து ஐதராபாத்தில் நடந்த 2-வது ஆட்டத்தில் இந்தியா 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சமநிலை எட்டியது.

### தாக்கூர் முதல் கோல்

இதனால் சென்னை மோதல் ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பை உண்டாக்கியது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு சர்வதேச போட்டி சென்னையில் நடந்ததால், ரசிகர்கள் கூட்டம் அலை மோதியது. ரசிகர்கள் ஆதரவோடு தொடங்கிய இந்தப்போட்டியின் ஆரம்பத்தில் இந்திய வீரர்கள் ஆதிக்கம் செய்தனர். இதனால் முதல் பாதியின் 19-வது நிமிடத்தில் தீபக் தாக்கூர் ஒரு கோல் போட்டு இந்தியாவை முன்னணி பெறச் செய்தார். ஜெர்மனி வீரர்கள் முதல் பாதியில் அதிகம் திணறினர்.

### • ஜெர்மனி வெற்றி

இதையடுத்து நடந்த 2-வது பாதியில் நிலைமை அப்படியே மாறியது. சுறு சுறுப்புடன் ஆடிய இந்திய வீரர்கள் சோர்வடைந்தார்கள். 2-வது பாதி ஆட்டத்தில் ஜெர்மனி வீரர்கள் காட்டிய வேகத்துக்கு இந்திய அணியினரால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் ஜெர்மனி வீரர்கள் ஒலிவர் மற்றும் மைக்கேல் பிஜோர்ன் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர். எப்படியாவது ஆட்டத்தை சமன் செய்து விடவேண்டும் என்று இந்திய வீரர்கள் அதிக முயற்சி எடுத்தனர். ஆனால் அதற்குள் போட்டி முடிந்து விட்டது. இதனால் ஜெர்மனி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நட்பு முறை ஹாக்கித் தொடரையும் ஜெர்மனி கைப்பற்றியது.நட்பு முறையிலான பந்தயம் என்றாலும் ஜெர்மனி வீரர்கள் ஏதோ ஒலிம்பிக் போட்டி போல் ஆக்ரோஷமாக ஆடினர். இதனால் இந்திய வீரர்களுடன் 2 முறை சண்டையும் வந்தது. இதற்காக ஜெர்மனி வீரர்கள் 2 பேருக்கு நடுவர் பச்சை கொடி எச்சரிக்கையும் செய்தார்.

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

(நமது நிருபர்)

மகிழூர் சரஸ்வதி மகாவித்தியாலய வருடாந்த மெய்வல்லுனர் போட்டி அதிபர்.கி. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும்.

இவ் வைபவத்தில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் க.இராசநாயகம் கோட்டக்கல்வி அதிகாரி தெ.சுப்பிரமணியம், களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் எஸ்.பாஸ்கரன் உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.நாகராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

## விளையாட்டுப்போட்டியில் விரிவுரையாளருக்கு பொன்னாடை போர்த்திக் கெளரவம்

(முபா)

45 வருடங்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு அளப்பரிய சேவையாற்றிய அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி விளையாட்டுத்துறை விரிவுரையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா கடந்த வியாழக் கிழமை பெரிய நீலாவணை புலவர்மணி செரிப்தீன் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பொன்னாடை போர்த்திக் கெளரவிக்கப்பட்டார்.

அதிபர் எம்.சி.அகமட் முகைதீன் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட லங்காதிலக மருதூர்க்கனி எம்.பி. பொன்னாடை போர்த்தி பாராட்டுரை வழங்குகையில் கூறியதாவது:-

''ஜனாப் முஸ்தபா சிறந்த விளையாட்டு வீரர் என்பதை நான் அறிவேன். ஆனால் அவர் சிறந்த ஊடகவியலாளரும் கூட, தேசிய பத்திரிகை ஒன்றின் செய்தியாளராக அவர் துடிப்பாக பல வருடங்கள் கடமையாற்றியதை நான் அறிவேன். கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்களில் அவரும் ஒருவர். பல திறமைகளையும் கொண்ட அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்ததையிட்டு பெரும் சந்தோசப்படுகின்றேன் என்றார்.

மற்றும் பலரும் உரையாற்றினர்.

## காரைதீவு கோட்ட மட்ட விளையாட்டுப்போட்டி

(காரைதீவு நிருபர்)

காரைதீவு பிரதேசக் கல்வி அலுவலகத்தின் கோட்ட மட்ட விளையாட்டுப்போட்டி வெள்ளியன்று பிரதேசக்கல்வி பணிப்பாளர் ம.சத்தியதேவா தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக வலயக்கல்விப்பணிப்பாளர் மருதூர்.ஏ.மஜீத், கௌரவ அதிதியாக பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஷ்ணன், சிறப்பதிதியாக உடற்கல்வி உ.க.பணிப்பாளர் எம்.ஐ.முஸம்மில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காரைதீவுக் கோட்டத்திலுள்ள 10 பாடசாலைகளும் இப்போட்டியில் கலந்து கொண்டன. பாண்ட் வாத்திய குழுவினருக்கான பரிசுகளை இ.கி.மி ஆண்கள் பாடசாலையும், பெண்கள் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

விளையாட்டுக்குழுச் செயலாளர் எஸ்.சிவபரன் நன்றியுரையாற்றினார்.



இந்திய அணிக்கு எதிராக மும்பையில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி அபாரமாக விளையாடி இந்திய அணியை 10 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தனது 16வது தொடர்ச்சி வெற்றியைக் கொண்டாடியது. இந்தப் போட்டியில் அபாரமாக விளையாடி இந்திய அணிக்கு எதிராக 84 பந்துகளில் சதம் அடித்து இந்திய அணியின் தோல்விக்கு வித்திட்டு ஆட்ட நாயகன் விருதைப் பெற்ற ஆஸ்திரேலியாவின் விக்கெட் கீப்பரும், அதிரடி பேட்ஸ்மேனும் ஆன ஆடம் கில்கிறிஸ்ட்டை படத்தில் காணலாம்

# வாசகர் நெஞ்சம்

## மூதூர் மீன் சந்தையின் அவல நிலை

மூதூர் பகுதியில் அமைந்துள்ள மூதூர் பட்டின சபைக்குச் சொந்தமான பொது மீன் சந்தைக் கட்டிடம் மிகவும் படுமோசமான நிலையில் காட்சியளிக்கிறது. இப்பகுதி வாழ் அனைத்து மக்களும் பல வருட காலமாக இங்கேயே மீன் பெற்று வருகின்றனர். இச் சந்தையில் மீன் வியாபாரிகள் மீன்களை வைத்து விற்பனை செய்வதற்கான உயர மேடைகள் இல்லாததினால் தரையிலேயே போட்டு விற்பதும், வெட்டுவதுமாக இருக்கின்றனர்.

இதனால் பொது மக்கள் மீன் இரத்தத்திலேயே நடந்து செல்ல வேண்டியுள்ளது. மக்களுடைய உடைகளிலும் மீன் இரத்தக் கறைகள் பட்டு பெரிய அசுத்தத்தில் தோய்கின்றனர். அத்துடன் இச்சந்தைக்குச் செல்லும் வழி மெயின் வீதியிலிருந்து இரண்டு குறுகிய பாதைகள் மட்டுமே உள்ளது. இப்பாதை மருங்குகளில் நடைபாதை வியாபாரிகள் மரக்கறி வகைகள் தேங்காய் போன்றவைகளையும் போட்டு வியாபாரம் மேற்கொள்வதாலும் பொது மக்களுக்குப் பெருத்த சிரமங்கள் ஏற்படுத்துகின்றன. இன்னும் இதே வழியில் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கின்றனர். இதுவும் பாரிய இடஞ்சல்களை மக்கள் அனுபவிக்க வேண்டி உள்ளது.

ஆகவே மூதூர் பட்டின சபை கூடிய கவனமெடுத்து குறுகிய கால எல்லையில் இம் மீன் விற்பனைச் சந்தையை நவீன முறையிற் திருத்தியமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகிறேன்.

**மூதூர்**
**"கலைமேகம்'**

## சேனைக்குடியிருப்பு கிராம வீதிகளின் அவல நிலை எப்போது தீரும்?

கல்முனை நகர சபைக்கு உட்பட்ட சேனைக் குடியிருப்பு கிராமத்தின் பிரதான வீதி மற்றும் உள்வீதிகள் யாவும் பல ஆண்டுகளாக மிகவும் மோசமடைந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக மக்களால் போக்குவரத்து செய்ய முடியாது இருப்பதோடு வாகனங்களும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் வீதி விபத்துக்களும் அடிக்கடி ஏற்படுகிறது. எனவே எமது மக்களின் நலன் கருதி சிறந்த வடிகால்மைப்புக்களை கொண்டதும் மக்களால் போக்குவரத்து செய்யக் கூடியதுமான வீதிகளை அமைத்து தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்பதே இக்கிராம மக்களின் அவா.

**எஸ்.சந்திரகுமார்**
**சேனைக்குடியிருப்பு**

## தினக்கதிருக்கு வாழ்த்துக்கள்!

தினக்கதிரில் வெளிவருகின்ற 'மெய்தானா சங்கதி' என்ற பகுதி பாராட்டப்படக்கூடியது. நம்மத்தியிலே இப்படியும் மனிதர்கள் உள்ளார்களா என்று வியக்க வைக்கிறது. இவ்வாறான சம்பவங்களை உடனுக்குடன் துணிச்சலுடன் பிரசுரிக்கும் தினக்கதிரின் சேவை அளப்பரியது. இத்துடன் 'எறிகணை ஏகாம்பரம்' 'வாசகர் நெஞ்சம்' என்பனவும் மிகவும் வரவேற்கப்பட வேண்டிய பகுதிகளாகும்.

மேலும் தினக்கதிர் தொடர்ந்து சிறப்புடன் வெளிவர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**க.முருகேசு**
**இருதயபுரம்**

## ஏன் இவர்கள் இப்படி?

களுவாஞ்சிகுடிப் பகுதியில் சுகாதாரத்தைச் சீர் செய்யும் அதிகாரிகள் சிறு பொருட்கள் தயாரிப்பாளர்களிடம் இருந்து இலவசமாக உற்பத்திப் பொருட்களை வாயால் கேட்டு வாங்கிச் செல்வதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது. அப்படி பொருட்கள் கொடுக்காவிட்டால், தயாரிப்பாளர்களின் பொருட்களில் இறுக்கமாக இருப்பதுடன் அடிக்கடி வந்து சோதனையிட்டு அது, இது என்று தொந்தரவு கொடுப்பார்களாம். அவ்வேளையில் தயாரிப்பாளர்களிடம் இருந்து பணத்தினை பெறுவதுடன், பாட்டி ஏனைய விசேட தினங்களுக்கு தங்களுக்கு தேவையான பொருட்களினை தயாரிப்பாளர்களிடம் இருந்து பெற்றுச் செல்லும் அநாகரியமான செயல் இடம் பெறுகிறது. இதனால் அரச அதிகாரிகளை பொது மக்கள் ஓர் வித்தியாசமான கண்ணோட்டத்துடன் பார்க்க நேரிடுகிறது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் உண்மையாக நியாயமாகக் கடமை செய்ய வேண்டுமென்று வேண்டுகிறோம்.

**எழுவான்**
**களுவாஞ்சிகுடி**

# மட்டக்களப்பு மாநகரசபை முன்பாக முச்சக்கர வண்டிகள் மறியல் போராட்டம்




(காந்தன்)

**மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட முச்சக்கர வண்டி (ஓட்டோ) ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மாநகர சபைக்கு முன்பாக நேற்று காலை மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர் இப் போராட்டத்தில் ஏழை ஊழியர்களின் வயிற்றில் அடிக்காதே ஆணையா ளரே உனது அராஜகத்தை நிறுத்து என்ற பல சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் சாரதிகள் காணப்பட்டனர்.**

இது தொடர்பாக முச்சக்கர வண்டிச்சங்கத் தலைவர் கூறுகையில் தாம் வழமை போல் காலையில் தமது தரிப்பிடத்திற்கு வந்த போது அவ்விடத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்த வேண்டாம் என்ற வாசகத்துடன் பெயர் பலகை ஒன்று மாநகர சபையினரால் போரட்டப்பட்டிரு ப்பதையிட்டே நாம் போடப்பதிற்கு ஆயுத்தமானோம்

சிறிது நேரத்தின் பின் அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் அதிகாரி மாநகர ஆணையாளர் பிரதேச செயலாளர் முச்சக்கர வண்டி சங்க முக்கியஸ்தருடன் நடத்திய கலந்துரையாடலின் பின் சங்கத் தலைவர் கருத்துக் கூறுகையில் காந்தி சிலை தரிப் பிடம் பஸ் தரிப்பு அருகில் உள்ள தரிப்பிடம் போன்ற இடங்களில் உள்ள முச்சக்கர வண்டி சொந்த காரர்கள் சரியான முறையில் வரி செலுத்தாமையிலே தாம் இந்த நடவடிக்கையினை மேற்கொண்ட தாக மாநகர ஆணையாளர் தெரிவித்ததாகவும் இவர்கள் இதற்காக வரியினை படிப்படியாக செலுத்தும் பட்டத்தில் முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தை நல்ல முறையில் மாற்றித் தருவதோடு அவர்களுக்கான குடிநீர் வசதிகளையும் செய்து தருவதாக மாநகர சபை ஆணையாளர் உறுதியளித்த தாகவும் தெரிவித்தார்.

மேற்படி உறுதி மொழிகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து முச்சக்கர வண்டிகள் மாநகர சபை வாயிலிருந்து வெளியேறின.

தொடர்ந்து மதியம் 12.30 மணியளவில் பஸ் தரிப்பிடத்தில் நாட்ட ப்பட்டிருந்த மாநகர சபையின் அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டது.

## பிரித்தானியா வரலாற்று தவறு செய்து விட்டது

*பொன். செல்வராசா எம்.பி.*

(அரியம்)

மட்டக்களப்பு மாவட்ட த்திலோ அல்லது வடக்கு கிழக்குப் பகுதியிலோ எவ்வாறான நவீன விளையாட்டு மைதானங்களையும் அமைக்கலாம் ஆனால் அதை தக்க வைக்க முடியுமா என்பது தான் இன்றைய கேள்வி ஏனெனில் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் விளையாட்டு மைதானத்தில் கடந்த வருடம் இலங்கை அரசாங்கத்தின் விமானங்கள் குண்டு போட்டு அழித்தமை போல் இன்னும் நடக்காது என்பதற்கு என்ன உத்த ரவாதம் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு விழாவில் சிறப்பு அதிதியாக நேற்று கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது.

இன்று என்ன அபிவிருத்தி . செய்ய வேண்டுமானாலும் தற்போது இடம் பெறும் போர் நிறுத்தப்பட வேண்டும் போரில் ஈடுபட்டுள்ள ஒரு சாராரான தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் போரை இதய சுத்தியுடன் சமாதானத்திற்காக முன் வரும் வேலையில் அரசானது செவிடன் காதில் ஊதிய சங்கு மாதிரி தட்டிக் கழித்து போருக்கான திட்டங்களை வகுப்பதில் அக்கறை காட்டுவது நிறுத்தப்பட வேண்டும்.

பிரித்தானியா அரசு இன்று மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் தமிழ் இனத்திற்கு வரலாற்று தவறு செய்து விட்டது. அயல் நாடுகளின் கதைகளைக் கேட்டு தமிழ் மக்களை மனம்நோக பிரித்தானிய அரசு செய்து விட்டது.

எனவே உறுதியான பேச்சுவார்த்தைக்கு அரசு தயாராகி சமாதானத்திற்கு ஒத்து வர வேண் டும் எனவும் கூறினார்.

சிவானந்தா தேசிய கல்லூரியின் விளையாட்டு விழாவில் முதலாம் இடத்தை 265 புள்ளிகளைப் பெற்று விவேகா னந்தா இல்லமும் 218 புள்ளிகளைப், பெற்று விபுலா னந்தா இல்லமும் 121 புள்ளிக ளைப் பெற்று இராமகிருஷ்ண இல்லமும் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## அமைதி சமாதான வேண்டி விஷேட துஆப் பிரார்த்தனை

(ஏ.எல்.எம்.பழுலுல்லாஹ்)

கிழக்கிழங்கை வாழ் முஸ்லிம்கள் தமது ஹஜ்ஜுப் பெரு நாள் தினத்தை புனித பள்ளி வாயல்களில் கொத்பா தொழுகை யில் ஈடுபட்டு இன்று கொண்டாடு கின்றனர்.

காத்தான்குடி,கல்முனை,அக்க ரைப்பற்று, ஏறாவூர்.ஓட்டமா வடி,நிந்தவூர், சாய்ந்தமருது, சம்மா ந்துறை, பொத்துவில் ஆகிய பிரதேச பள்ளிவாயல்களில் நாட்டில் அமை தி சமாதானம் வேண்டியும் விஷேட துஆப் பிரார்த்தனையும் இடம் பெறுகிறது.

இதேவேளை காத்தான் குடி கடற்கரை வீதியில் அமைக்கப் பட்டுள்ள பெருநாள் பஜாரில்சுமார் 20,000த்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று கூடும் இவ்வைபவத்தில் தமிழ் மக்களும் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

## பிரித்தானியவுக்கு எதிராக கிளிநொச்சி வெகுஜன அமைப்புக்கள் கண்டனம்

பிரித்தானிய அரசு விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்துள்ளமையிட்டு அதிர்ச்சியடைந்துள்ளதுடன் இச் செயலை வன்மையாக கண்டித்து நிற்கின்றோம் என கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் பிரித்தானிய பிரதமரி ஜோன் பிளேயருக்கு அனுப்பி வைத்த மனுவில் தெரிவித் துள்ளது.

இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் செறிந்து வாழ்கின்ற ஒரு தேசிய இனமான தமிழினத்தின் ஜனநாயக உரிமையையும் கலை கலாசார பாரம்பரியங்களையும் சிங்கள இனம் திட்டமிட்டு காலத்துக்கு காலம் பறித்து, தமிழினத்தை ஓர் அடிமை இனமாகக் கொண்டு செல்வதை பல ஜனநாயக போராட்டங்களின் மூலமும் அகிம்சை வழிமுறைகளின் ஊடாகவும், தமிழ் தலைவர்கள் எடுத்துக் கூறி வந்துள்ளார்கள். அந்த மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சாந்தி
5முதல்
அர்ஜுன் அபிராமி
வானவில்

## அமெரிக்க...

பற்றியும் உரை நிகழ்த்த விருக்கிறார். யாழ் அரசாங்க அதிபரை முதலில் சந்தித்து பேசும் தூதுவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு அமெரிக்க அரசின் சார்பில் சில சாதனங்களையும் வழங்குவார். உடுவிலுக்கு அவர் உட்பட ஐவர் அடங்கிய குழுவுடன் தூதுவர் யாழ்ப்பாணம் வருகிறார்.

## சந்திரிக்கா.........

இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசையில் சந்திக்க வைப்பதற்கு சமாதானத் தூதுவர் முயற்சி செய்வதாகவும் இது சம்பந்தமாக தூதுவர் இன்றோ நாளையோ மீண்டும் லண்டன் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங் கத்தை சந்தித்துப் பேச்சுவா றென்றும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

தூதுவர் சொல்ஹெய்ம் மேலும் இரு தினங்கள் இலங்கை யில் தங்கி நின்று ஆலோசனை செய்த பின்னரே லண்டன் செல்வா றென்று எதிர் பார்க்கப்பட்டதாகவும் எனினும் இன்று நாடு திரும்புகி ன்றார் என அரசியல் வட்டாரங் களிலிருந்து தெரியவருகிறது.

## மலையக மக்கள் முன்னணி நேற்று எழுச்சிப் பேரணி

(அட்டன்)

மலையக மக்கள் முன்ன ணியின் ஆதரவில் நேற்று எழுச்சிப் பேரணி ஒன்று நடைபெற்றது.

நானூறு ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் 121 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கை களை முன்வைத்தே. இந்த பேரணியை நடத்தினர்.

பொகவந்தலாவை,அம பஸ்கொட, மஸ்கெலியா,அக்கரப்ப த்தனை,தயகம, போன்ற இடங்களில் இருந்து சத்தியாகிரகப் போராட்டம் நடைபெறும் அட்டன் நகரை நோக்கி பேரணியினர் சென்றனர்.

ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்தப் பேரணியின் போது டிக்கோயாவில் வைத்து மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி.சந்திர சேகரன் பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் இணைந்து கொண்டமை குறிப்பிட த்தக்கது.

இதேவேளை நேற்று மலைய ஆசிரியர் ஒன்றியம் ஆசிரி யர் காங்கிரஸ் ஆதரவு தெரிவித்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பிந்துனுவெவ சந்தேக நபர்கள் தாக்கல் செய்த வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

பண்டாரவளை பிந்துனு வெவ படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்த வைக் கப்பட்டிருக்கும் பொலிஸார் தாக்கல் செய்த மனு தொடர்பான விசாரணை எதிர்வரும் 31ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்க ப்படுகிறது.

தாங்கள் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்ப துடன் அடிப்படை மனித உரிமை யை மீறும்செயல் எனக் கோரி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 19 பொலிஸாரும் உயர் நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர் சரத்.என்.சில்வா,எஸ்.டபிள்யூ. பி.வடுகொடப்பிட்டிய, அமீர் இஸ்மா யில் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த வழக்கு விசார ணையின் போது ஏப்ரல் மாதம் 27ம் திகதிக்கு முன்னர் பிரதிவாதிகள் எதிர் மனுவை சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவித்தார்.

## மூன்றரை இலட்சம் பெறுமதியான சீனி லொறி கடத்தல் !

(நமது நிருபர்)

மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு லொறி சீனியை ‘டெலிக்கா’வானில் வந்த ஐந்து பேர் அடங்கிய கொள்ளையர்கள் குழு கடத்திய சம்பவம் ஒன்று நடந்து ள்ளது.

லொறியின் பெறுமதி 18 லட்சம் ஆகும் சிறிது தூரம் சென்ற பின் சாரதியையும் நடத்துனரையும் அடித்து இறக்கி தங்களது வானில் ஏற்றி சிறிது தூரத்தில் அவர்களை தூங்கி எறிந்து விட்டு சென்றுள் ளனர்.மிகவும் பிரயத்தனத்தின் மத்தி யில் தங்களது கைகளையும் கண்க ளையும் அவிழ்த்து பஸ் ஒன்றில் ஏறிய அவர்கள் புலத்சிங்க பொலிஸில் முறைபாடு செய்துள் ளனர்.

பொலிஸார் தீவிர விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்காவில் பிரார்த்தனை

(ஏ.எம்.எம்.பழுலுல்லாஹ்)

இலங்கை திரு நாட்டில் இருந்து புனித மாக்காவிற்கு சென்ற 6.255 பேர் அமைச்சர் றவூர்ஹக்கீம் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி மற்றும் பிரதி அமைச்சர்கள் ஒன்றிணைந்து ஞாயிற்றுக்கிழமை இலங்கை திரு நாட்டில் சாந்தி சமாதானம் ஐக்கியம் அமைதி வேண்டி புனித மக்கா மஸ்ஜிதுல் நபவிய்யா பள்ளிவாயலில் மனம் உருகி கண்ணீர் மல்க விஷேட பிரார்த்தனையில் ஈடுப்பட்ட தாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த ஹஜ்ஜாஜிகள் அனைவரும் அடுத்தவாரம் முதல் படிப்படியாக தொகுதி தொகு தியாக நாடு திரும்பவுள்ளனர்

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.